DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | |
|---|---|
| Calendar | } CC 426/2020 PW 3 ( Additional Witness ) |
| Preliminary Register | } |
| Name | } G.பழனியம்மாள் |
| Father's name | }காவல் ஆய்வாளர். |
| Taluk | |
| Village | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or

**Date: 15.02.2023**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது காட்டுர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது அனைத்து மகளிர் காவல் நிலையம் மத்தியத்தில் பொறுப்பு ஆய்வாளராக உள்ளேன். அந்த காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஆய்வாளர் முத்துமணி என்பவரின் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.11.2019 ம் தேதி பகல் 14.30 மணிக்கு அப்போது நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் உஷா குமாரி என்பவரிடம் கீர்த்தனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.7/2019 சட்டப்பிரிவு 498 (ஏ) இ.த.ச மற்றும் 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிகை அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்து.)** அதன் பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் முத்துமணி அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கீர்த்தனா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன் பின்னர் 14.11.2019 ம் தேதியன்று சாட்சிகள் மகாலட்சுமி, மதிவாணன், மதுமதிமீனாட்சி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 22.11.2019 ம் தேதியன்று சாட்சிகள் சரவணன், கீதா ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

23.11.2019 ம் தேதியன்று சாட்சி ராதிகா மற்றும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் உஷா குமாரியை விசாரித்து அத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து இவ்வழக்கில் மேலும் இரண்டாம் எதிரி மல்லிகா மூன்றாம் எதிரி நாகராஜ் ஆகியோர்களை குற்றவாளிகளாக கூடுதலாக சேர்த்து அது சம்மந்தமாக தனி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(தனி அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

21.10.2019 ம் தேதியில் எதிரிகள் வாதியை திட்டியதாக சொல்லப்பட்டது தொடர்பாக திப்பம்பட்டி பகுதியில் உள்ள யாரையாவது சாட்சியாக விசாரித்துள்ளார்களா என்றால் இல்லை. திப்பம்பட்டி பகுதிக்கு நேரில் சென்று விசாரணை செய்துள்ளாரா என்றால் அவ்வாறு சென்றதாக குறிப்பிடவில்லை. 1 ம் எதிரி வாதியை கட்டாயப்படுத்தி ஆபாச இணையதளங்களில் ஆபாச படம் பார்க்க வற்புறுத்தியதாக சொல்லப்பட்டது தொடர்பாக ஏதும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் இல்லை. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள மற்ற சாட்சிகள் அனைவரும் சம்பவம் பற்றி கேட்டு தெரிந்து கொண்ட சாட்சிகள் என்றால் சரிதான். எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றும் புகார்தாரருக்கு ஆதரவாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரியல்ல. அருகில் இருந்த சாட்சிகளும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும்.